செ.வெ.எண்.39 நாள் : 01.03.2017

**மதுரை மாநகராட்சி மிடுக்கான நகரத்திட்டத்திற்கு சிறந்த சின்னம் மற்றும் இலக்கு உரை வழங்குபவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும் ஆணையாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர், (ஸ்மார்ட் சிட்டி நிறுவனம்) திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

மத்திய அரசின் நகாப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சி மிடுக்கான நகரத் திட்டத்தில் (SMART CITY) தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக Smart City Ltd. என்ற புதிய நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிடுக்கான நகர திட்டத்திற்கு என்று சிறந்த சின்னம் (LOGO) மற்றும் TAGLINE தேர்வு செய்யப்பட உள்ளது.

எனவே கல்லூரி மாணவ, மாணவிகள், வடிவமைப்பாளர்கள், தனியார் நிறுவனத்தினர், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மதுரை மாநகரின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் வகையில் மிடுக்கான நகரம் குறித்த சிறந்த சின்னம் மற்றும் TAGLINE தயார் செய்து எதிர்வரும் 17.03.2017க்குள் mducorp@gmail.com என்ற இமெயில் முகவரிக்கும், ஆணையாளர் / தனி அலுவலர், அறிஞர் அண்ணா மாளிகை மதுரை மாநகராட்சி என்ற முகவரிக்கும் தாங்கள் வடிவமைத்த சின்னம் குறித்த விரிவான விளக்கத்துடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் பெறப்படும் சின்னம் மற்றும் TAGLINE சிறந்தது குறித்து பொதுமக்களிடம் ஓட்டெடுப்பு நடத்தப்பட்டு முதல் இடம் பெறும் சின்னம் மற்றும் இலக்கு உரைக்கு ரூ.50000மும், இரண்டாம் பரிசு ரூ.25000மும், மூன்றாம் பரிசாக ரூ.15000மும் என ரொக்கப்பரிசு வழங்கப்படும்.

எனவே மதுரை மாநகரின் மிடுக்கான நகரத் திட்டத்திற்கான சின்னம் (LOGO) மற்றும் TAGLINE 17.03.2017க்குள் அனுப்பி வைக்குமாறு ஆணையாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர், (ஸ்மார்ட் சிட்டி நிறுவனம்) திரு.சந்தீப்நந்தூரி, இ.ஆ.ப. அவர்களால் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

**வெளியீடு : செ.ம.தொ.அ மதுரை மாநகராட்சி**

Madurai Corporation has been selected as one of the Smart Cities under the Smart City Mission of Government of India. As per the guidelines of this scheme a new Special Purpose Vehicle "Madurai Smart City Limited" has been set up.

The Managing Director of Madurai Smart City Ltd. (MSCL) and Commissioner/ Special Officer Madurai Corporation would like to announce the Launch of a design contest.

Objective : To design a LOGO, BRAND NAME and TAGLINE for the "Madurai Smart City" . The Logo and the tagline should reflect the rich cultural heritage and the ambitious smart & futuristic plans for the city.

Time line : The designs along with write up explaining the logic behind the design should be submitted by email at mducorp@gmail.com or by hardcopy at the Office of Commissioner, Madurai Corporation before 17th March 2017.

Prizes : The shortlisted designs will be put up for an online vote and the top three designs will be given prizes. The first prize is Rs.50,000, Second Prize is Rs.25000 and the Third prize is Rs.15,000.

The competition is open to all the design firms, Students, Professional designers and public.